RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# குறுந்தொகை காட்டும் விலங்குகளின் அன்புநெறி

## தூ. கார்த்திக் ராஜா [அ *]

[அ] தமிழ்த்துறை, பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-14, தமிழ்நாடு, இந்தியா

# The Representation of Animal Affection in Kurunthogai

## T. Karthick Raja [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu, India

*Corresponding Author:
karthickrajat@psgcas.ac.in

**ABSTRACT**

Kurunthogai, one of the finest anthologies of Sangam literature, is a distinguished work of Akam poetry that vividly portrays the emotional life and cultural values of the ancient Tamils across the five ecological landscapes (thinai). Over the years, scholars have examined the anthology from various perspectives, exploring themes such as motherhood, romantic love, devotion between lovers, sacrifice, sharing, family responsibility, and the emotional struggles arising from separation. These studies demonstrate the richness of Kurunthogai in portraying the complexities of human relationships and emotions. Beyond its depiction of human life, Kurunthogai also presents profound observations of the natural world. The anthology portrays plants, animals, and birds not merely as elements of the landscape but as living beings whose behaviors and emotional bonds mirror human experiences. Through these representations, the poets reveal qualities such as affection, loyalty, parental care, companionship, and mutual dependence, thereby emphasizing the close relationship between humans and other living creatures. Living in harmony with nature, the ancient Tamils interpreted the behavior of animals as symbolic expressions of ethical values and compassionate living. This article examines how Kurunthogai employs the actions and emotional bonds of animals to communicate ideals of love, affection, and moral conduct, thereby illustrating the deep ecological awareness and humanistic vision of Sangam literature.

**Keywords:** Kurunthogai, Akam poetry, Animal Affection, Nature

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் மிகவும் சிறப்புக்குரிய நூலாகத் திகழ்வது குறுந்தொகை என்னும் அகநூல் ஆகும். குறுந்தொகையின் வாயிலாக ஐந்திணைகளில் வாழ்ந்த பழந்தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த விழுமியங்களை காலம்தோறும் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதில் மனித உணர்வுகளாகிய தாய்மை, காதல், துணை மீதான அன்பு, தியாகம், பகுத்து உண்ணுதல், குடும்ப பொறுப்பு, தலைவன் தலைவியினுடைய பிரிவு மன உணர்வுப் போராட்டங்கள் போன்ற பல்வேறு உணர்வுகள் பிற ஆய்வுகளில் இடம்பெற்று இருப்பதை நம்மால் காண முடியும். அதைப்போலவே மனிதர்களுக்கு இணையாக அவர்களுடைய வாழ்வியலோடு தொடர்புடைய தாவரங்கள், விலங்குகள், பறவைகள் எனப்பிற உயிர்கள் கொண்டுள்ள உணர்வுகளையும் பாசப்பிணைப்புகளையும் மிக நுட்பமாக ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழர்கள் விலங்குகளின் செயல்கள் வழியாக மனிதனுக்கு வாழ்வியல் அறங்களையும், அன்பு நெறியினையும் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர். என்பதை ஆராயும் நோக்கில் இந்தக் கட்டுரையானது அமைகிறது.

## அன்புடைமை

அன்பு என்பது மனிதனுக்கு மட்டும் உரிய உணர்வு என்று கருதுவது தவறான சிந்தனையாகும். அன்பானது எல்லா உயிரினங்களுக்கும் உயிராக விளங்கக்கூடிய உயரிய குணமாகும். இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களும் அன்பினால் பிணைக்கப்பட்டே வாழ்கின்றன. இதனை தொல்காப்பியர்

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரும் மேவற்றாகும்" (தொல்.பொரு. 219)

என்று தொல்காப்பியம் பொருளியல் இலக்கணத்தில் மிக அழகாக தெளிவுபடுத்துகின்றார்.

இதனையே திருவள்ளுவர் அன்பு என்பது மிகவும் உயர்ந்த அறமாகவும் மனிதநேயத்தின் அடிப்படையாகவும் இருக்கின்றது என்பதை வலியுறுத்தும் விதமாக

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்" (குறள்:71)

என்ற குறளின் மூலமாக அன்பை அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் உலகில் எந்த உயிருக்கும் இல்லை என்பதையும் அவ்வாறு அடக்கி வைக்க முயற்சித்தால் சிறு கண்ணீர் மூலமாக அவர்கள் கொண்டிருந்த அன்பானது பலர் அறியும் படியாக வெளிப்பட்டு காட்டிக் கொடுத்து விடும் என்பதை நயமாக எடுத்துரைக்கிறார்.

உலக உயிர்களிடத்தில் அன்பு இல்லையெனில் உலகம் இயங்காது. இம்மண்ணுலகில் உயிர்கள் பிறத்தலும், இறத்தலும் நியதியாக இருக்கின்ற பட்சத்தில் இவ்விரண்டுக்கும் இடையே வாழ்வை சுவைபட அமைத்து தருவது அன்பு ஒன்றே. என்பதை அறிவுறுத்தும் விதமாக எண்ணற்ற தமிழ் இலக்கியங்கள் காலம்தோறும் வெளிப்பட்டு கொண்டே இருக்கின்றது.

## அஃறிணை உயிர்கள்

பழந்தமிழன் இயற்கையோடு இணைந்த வாழ்வை பெரிதும் விரும்பி இருந்திருக்கின்றான் என்பதைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறிந்து கொள்ள முடியும். தமிழர்கள் அஃறிணை உயிர்கள் குறித்த அறிவினையும் மிகச் சிறப்பாக பெற்றிருந்தனர் என்பதற்கு இத்தகைய இலக்கியங்கள் சாட்சியங்களாக இருக்கின்றன. விலங்குகளின் செயல்பாடுகளைக் கொண்டு மனித வாழ்வுக்குத் தேவையான வாழ்வியல் நெறியைப் போதித்து அதன்படி நடக்கும் படியாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறான்

சிந்திக்கும் ஆற்றல் கொண்ட மனிதன் தன்னைச் சுற்றி இருக்கின்ற உயிரினங்கள் எத்தகைய அறிவினைப் பெற்றிருக்கின்றது என்பதை விளக்கும் விதமாகத் தொல்காப்பியர்,

"புல்லும் மறனும் ஓர் அறிவினவே" (தொல். மர.1527)

"நந்தும் முரளும் ஈர் அறிவினவே" (தொல். மர.1528)

"சிதலும் எறும்பும் மூவறிவினவே" (தொல். மர.1529)

"நண்டும் தும்பியும் நான்கறிவினவே" (தொல். மர.1530)

"மாவும் மாக்களும் ஐயறிவினவே" (தொல். மர.1531)

என்ற நூற்பாவின் மூலமாக அஃறிணை உயிர்களுக்கு எத்தகைய அறிவு உணர்வு நிலைகள் இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றார். தலைவன் தலைவியின் காதலைக் கூறும் அகப்பாடல்களில் தான் கருப்பொருள்கள் அதிகம் இடம்பெறுகின்றன. அத்தகைய பாடல்களில் அஃறிணை உயிர்களின் செயல்பாடுகளை இயற்கைச் சூழலுக்காக மட்டும் பயன்படுத்தாமல் கருத்துச் சூழலுக்காகவும் அறிவுரை கூறுவதற்காகவும் அன்பை வெளிப்படுத்துவதற்காகவும் புலவர்கள் மிக நயமாக கையாளுகின்றனர்.

## விலங்குகளின் அன்பு நெறி

உலக உயிர்களிடத்தில் அன்பு இல்லையெனில் உலகம் ஒரு அமைதியான வாழ்வைப் பெற முடியாது. வாழ்க்கையில் வேர் என்பதே அன்பில் தான் ஊன்றி இருக்கின்றது. அன்பு இல்லாத வாழ்க்கை நீர் வற்றிய மரத்தைப்போல பசையற்று பயன்படாததாகி விடும். குறுந்தொகை பாடல்களில் அணில், ஆடு, ஆனேறு, எலி, எருமை, பூனை, புலி, மடல் மா, மான், யானை, செந்நாய், நாய் , குதிரை, குரங்கு, பசு , போன்ற பல்வேறு விலங்குகள் பற்றிய குறிப்புகள் அடங்கிய கருப்பொருள்கள் இடம்பெறுகின்றன. இதில் குறிப்பிட்ட சில விலங்குகளின் உடைய வாழ்வியலோடு தொடர்புடைய அன்பு நெறியை மட்டும் இக்கட்டுரையில் காண இருக்கின்றோம்.

பசு தொடர்பான செய்திகள் 16 பாடல்களிலும், மான் தொடர்பான செய்திகள் 25 பாடல்களிலும், யானை தொடர்பான செய்திகள் 49 பாடல்களிலும், குரங்குகள் தொடர்பான செய்திகள் 14 பாடல்களில் இடம்பெற்று இருக்கிறது. ஆய்வின் எல்லை கருதி சில பாடல்களின் கருத்துக்களைக் கொண்டு விலங்குகளின் அன்பு நெறியானது மனித வாழ்விற்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை தாய்மையின் உன்னதம், துணை மீதான அன்பும் தியாகமும், பகுத்து உண்ணுதல் பண்பு, மனிதர்களுடனான அன்பு என நான்கு தலைப்புகளில் அறிந்து கொள்ளலாம்.

தாய்மையின் உன்னதம் ஈன்ற உயிரைப் பேணிப் பாதுகாப்பது என்பது மிகவும் உயரிய குணமாகும். இது மனிதர்களைப் போலவே பிற உயிர்களுக்கும் இருக்கக்கூடிய தாய்மை உணர்வு என்பதை விளக்கும் விதமாக குறுந்தொகையில்

"மகவுடை மந்தி போல

அகன் உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே" (குறு. 29)

என்னும் பாடல், தலைவனின் காதல் வேதனையைப் புரிந்து கொண்டு யாரும் அன்பு செய்யவில்லையே என்ற கருத்தை உணர்த்தும் விதமாக உயர்ந்த மரக்கிளையில் அமர்ந்திருக்கும் ஒரு பெண் குரங்கு தன் குட்டியை கீழே விழாதவாறு மார்போடு அணைத்துக் கொண்டு மரக்கிளைகளைத் தாவிச் செல்லும் தன்மை உடையது என்று தாய்மையின் அன்பு உணர்வினை இந்த பாடல் பதிவு செய்கின்றது. முல்லை நிலத்தில் கன்றை பிரிந்து மேச்சலுக்குச் சென்ற கறவை பசுவானது மாலை நேரத்தில் பசியோடு காத்திருக்கும் தன் கன்றுவின் நினைவு வந்ததும் மிக விரைவாகக் கன்றைத் தேடி ஓடி வருகின்ற காட்சியை,

“மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடிக்

கறவை கன்று வயின் படர்” (குறு. 108)

என்ற பாடல் பசுவிற்கு இருக்கும் தாய்மை உணர்வினை வெளிக்காட்டுகிறது. எருமை தன் கன்றிடம் கொண்ட பேரன்பை விளக்கும் விதமாக குறுந்தொகையில் 181 வது பாடலில் இடம் பெற்றிருக்கிறது. இதில் அண்மையில் கன்று ஈன்ற எருமை ஒன்று தன்னுடைய கன்றை பிரிந்து மேய்ச்சலுக்கு செல்ல மனம் இல்லாமல் உழவனின் வீட்டுக்கட்டுத்தறியில் கட்டப்பட்டிருக்கும் தன் கன்றையே சுற்றி வருகிறது. பசியின் போது மிக அருகில் இருக்கும் சிறு புற்களை மேய்ந்து தன் பசியைப் போக்கிக் கொண்டு கன்று உடைய பசியையும் போக்குகின்றது என்ற செய்தியை,

“இரு மருப்பு எருமை ஈன்ற ணிக் காரான்

உழவன் யாத்த குழவியின் அகலாது

பாஅல் பைம் பயிர் ஆரும்” (குறு. 181)

என்ற பாடலின் மூலம் விலங்குகள் கொண்டுள்ள தாய்மையின் உன்னதத்தை அறிந்து கொள்ள முடியும். மேலும் மற்றொரு பாடலில்

“புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு

நிலம் தூங்கு அணல வீங்கு முலைச் செருத்தல்

பால் வார்பு குழவி உள்ளி நிரை இறந்து” (குறு. 344)

என்னும் வரிகளின் மூலமாக மேய்ச்சல் நிலத்தில் பசு கூட்டத்துடன் மேய்ந்து கொண்டிருந்த பசு தன் கன்றுக்குப் பால் கொடுக்க வேண்டும் என எண்ணி தன் கூட்டத்தை விட்டு பிரிந்து மிக விரைந்து வந்து தன் கன்றுவின் பசியைப் போக்கியது என்று முல்லைத்திணை பாடல் விளக்குவதன் மூலம் தாய்மை உணர்வின் ஆழத்தை அறியலாம்.

## துணையின் மீதான அன்பும் தியாகமும்

ஆணும் பெண்ணுமாகப் பிரியாது வாழும் அன்புடைமை விலங்குகளின் வாழ்க்கையிலும் இருக்கின்றது. என்பதை மிக அழகாகப் புலப்படுத்தக்கூடிய பாலைத் திணை பாடல்களில் மூலம் காண முடியும். பசி நீங்க உண்ணும் போதும், நீர் வேட்கை நீங்கப் பருகும் போதும், இணை பிரியாது வாழும் குரங்குகள், யானைகள் மற்றும் மான்களின் அன்பினை கீழ்காணும் பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பாலை நிலத்தில் உண்பதற்கும் பருகுவதற்கும் உணவு கிடைக்காத நிலையில் கூட குரங்கு கூட்டத்தின் ஆண் குரங்கானது தன் துணையின் பசியைப் போக்குவதற்கு பல இடங்களில் தேடி பின் ஓர் உயரமான மரத்தில் இருக்கும் கனிகளை கண்டு அந்த மரத்தின் மீது ஏறி முதிர்ந்த கனிகளைப் பறித்து கீழே இருக்கும் தனது பெண் குரங்கிற்கும் தனது குட்டிக்கும் கொடுத்து தானும் உண்ணக்கூடிய பண்பினை

“.............................கடுவன்

ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்து,

ஓர்ப்பன ஓர்ப்பன உண்ணும்

பார்ப்புடை மந்திய மலை இறந்தோரே.” (குறு. 278)

என்ற பாடல் வரிகளின் மூலமாக ஆண் குரங்கும் பெண் குரங்கும் ஒன்றினை ஒன்று சார்ந்து இருந்து குடும்பமாக வாழும் நிலையினையும் தனது குட்டியை பாதுகாக்கும் அன்பினையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

ஒரு ஆண் குரங்கு இருளில் ஒரு மரத்தின் கிளைகள் இருந்து தாவும் போது அக்கிளை முறிந்து கீழே விழுந்து இறந்து போகின்றது. அந்த ஆண் குரங்கு இறந்த சோகத்தைத் தாங்க முடியாத மந்தி கைம்மை நோன்பு வாழ விரும்பாமல் தன் குட்டியை கூட்டத்தாருடன் ஒப்படைத்து விட்டு தான் மட்டும் ஒரு மலை உச்சியில் சென்று தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் செய்தியை,

“கருங்கடல் தாக்கலை பெரும்பிறிது உற்றென

கைம்மை உய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளை முதல் சேர்த்தி

ஓங்கு வரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்” (குறு. 69)

என்று எடுத்துரைப்பதன் மூலம் பெண் குரங்கு கொண்டிருக்கும் பேரன்பையும், தன் குட்டியைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமையையும் உணர்ந்து கொள்வதோடு மனிதர்களைப் போலவே விலங்குகளுக்கும் கற்பொழுக்கம் பேணப்பட்டு இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

## பகுத்து உண்ணுதல் பண்பு

பாலை நிலத்தில் வாழும் ஆன்மா தனது கன்றின் பசியைத் தீர்ப்பதற்குக் காட்டிலுள்ள மரங்களின் பட்டைகளை தன் கொம்பினால் குத்தி உதிர்த்து கன்றுக்கு உணவாகக் கொடுக்கும் அன்பு நிகழ்வையும், வெயிலின் தன்மையை தாங்க முடியாத குட்டிக்கு தன் உடலின் நிழலை ஓய்வெடுக்கும் இடமாகக் கொடுத்து உதவும் மாண்பையும் எடுத்துரைக்கும் விதமாக,

"கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிய
பசிப்பிணிக்கு இறைஞ்சி பரூஉப் பெருந்தரல்
ஒழியன் உண்டு அழிவு இல் நெஞ்சின்
தெறித்து நடை மரபின் தன் மறிக்கு நிழலாகி" (குறு. 213)

என்ற காஞ்சிக் கொற்றவனின் பாடல் மூலமாக மான் கொண்டிருந்த அன்பையும் தன் குட்டியின் மீது கொண்டிருந்த பாசத்தையும், குடும்பப் பொறுப்பையும் அறியலாம்.

மான் கூட்டத்தை போலவே தன் சுற்றத்தைப் பேணிப் பாதுகாக்கும் பண்பு யானையிடமும் இருக்கக்கூடிய காட்சியை,

"பொத்துஇல் காழ அந்த யாஅத்துப்
போரி அரை முழுமுதல் உருவாக்குத்தி
மறகெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்
சிறுகட் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை" (குறு. 255)

விளக்குவதன் வாயிலாக ஆண் யானையானது தன் யானை கூட்டத்தின் பசிப்பிணியைப் போக்குவதற்கு "யா" மரத்தின் பட்டைகளைத் தன் கொம்புகளால் குத்தி உதிர்த்து உணவாகக் கொடுக்கும் நிகழ்வினைப் பதிவு செய்வதன் மூலம் அன்பும், குடும்பத்தின் மீது இருக்கக்கூடிய பொறுப்பும், கடமையும் எத்தகையது என்பதை விலங்குகளின் செயல்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இதுபோல ஆண் மானும், பெண் மானும் இணைந்து காட்டு உணவு அருந்திவிட்டு மலையின் அருகில் உள்ள சுனையில் நீர் அருந்திவிட்டு இணை பிரியாது இருக்கும் காட்சியைக் குறுந்தொகை 317-வது பாடல் பதிவு செய்கின்றது.

## மனிதர்களுடனான அன்பு

மனிதர்களிடம் அன்பு கொண்டு வாழும் விலங்குகளை பற்றி மிகுதியாக சங்க இலக்கியப் பாடல்களில் அறிந்திருப்போம். மனிதன் இயற்கையை நேசித்து இயற்கையோடு வாழ்ந்த காலகட்டத்தில் காட்டு விலங்குகளை எப்படி தன்மையப்படுத்தி அன்பு செலுத்தி வைத்திருந்தான் என்பதற்கு குறுந்தொகை பாடல் ஒன்று சாட்சியமாக இருக்கின்றது.

காட்டுப் பசுவினுடைய கன்றானது திசைமாறிச் சென்று வேடர்களிடம் தஞ்சம் புகுந்து வாழும் நிலை ஏற்படுகிறது. வேடர்கள் அக்கன்றை மிகுந்த அன்போடு அரவணைத்து அதற்கு உணவு கொடுத்து

பாதுகாக்கின்றனர். பின்பு அக்கன்றானது தன்னுடைய இனத்தை மறந்து மனிதர்களோடு இணக்கமாக இருந்து அன்பு செலுத்தும் பண்பைப் பெறுகின்ற நிகழ்வினை

"அமர்க்கண் ஆமான் அம்செவிக் குழவி

கானவர் எடுப்ப வெரீஇ இமை தீர்ந்துக்

கானம் நன்னிய சிறு குடிப் பட்டென" (குறு. 322)

என்னும் பாடல் வரிகளின் மூலம் மனிதர்களிடம் விலங்குகள் கொண்ட அன்பு புலப்படுகிறது.

## முடிவுரை

அன்பு என்பது மனிதனுக்கு மட்டும் உரிய உணர்வு இல்லை அது எல்லா உயிர்களுக்கும் உரிய உயரிய பண்பாகும். அஃறிணை உயிர்களின் அன்பு குறித்தும் அறிவுப் பகுப்பு குறித்தும் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. பெண் குரங்கு தன் குட்டியை மார்போடு அணைத்துக் கொண்டு அன்போடு பேணி பாதுகாக்கும் செயலையும், பசு தனது கன்றுக்கு பால் ஊட்டுவதற்கு தன் கூட்டத்தைப் பிரிந்து விரைந்து வீடு திரும்பும் பண்பையும் காண முடிகின்றது. எருமை தனது கன்றிடம் கொண்ட பேரன்பால் தான் மேய்ச்சலுக்கு செல்ல மனமில்லாமல் தன் கன்றை சுற்றி வரும் தாய்மையின் உன்னதத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது பாலை நிலத்தில் வாழும் மான்களின் கூட்டம் பசியால் வாடிய போது ஆண் மான் தன் சுற்றத்தை அன்போடு பேணி பாதுகாப்பதையும், அதுபோல யானை கூட்டம் தன் குற்றத்தைப் பசிப்பிணையிலிருந்து பாதுகாப்பதையும் விளங்கிக் கொள்வதன் மூலம் விலங்குகளின் அன்புநெறி எத்தகைய தன்மையுடையதாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. ஆண் குரங்கின் இறப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத பெண் குரங்கு தன் உயிரையே அதற்காகத் தியாகம் செய்யும் பேரன்பையும் கற்பு ஒழுக்கத்தையும் நினைக்கின்ற போது மனிதர்களை விட விலங்குகளிடமே அன்பு நெறியானது மேலோங்கி இருக்கிறது என்பதை இந்த ஆய்வானது நிறுவ முயற்சிக்கின்றது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பழந்தமிழர்கள் விலங்குகளின் செயல்பாடுகளைக் கொண்டு தன் அறிவை விரிவுபடுத்திக் கொண்டனர் அது மட்டும் இல்லாமல் மனிதனுக்கு தேவையான வாழ்வியல் அறங்களையும் அன்பு நெறியினையும் மற்ற அஃறிணை உயிர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர் என்பது இந்த கட்டுரையின் வாயிலாகப் புலனாகின்றது.

## References

நாகராஜன். வி.(2004). குறுந்தொகை மூலமும் உரையும், நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.

இளம்பூரணனார் (2005), தொல்காப்பியம்-பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.

பரிமேலழகர் (2018), திருக்குறள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License